## நிவர் புயலால் நிறுத்தப்பட்ட

# மெட்ரோ ரயில் சேவை மீண்டும் தொடக்கம்

சென்னை, நவ. 26-

சென்னையில் பச்சை மற்றும் நீள வழித்தடங்களில் மெட்ரோ ரயில் சேவை செயல்பட்டு வருகின்றது. இந்தநிலையில், அதி தீவிர புயலாக இருந்த நிவர் புயல் தீவிர புயலாக வலு குறைந்து இன்று அதிகாலை 2.30 மணிக்கு கரையை கடந்தது. முன்னதாக ரயிலின் காற்றின் வேகத்திற்கு ஏற்ப மெட்ரோ ரயில் சேவை இயக்கப்படும் என மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்திருந்தது.

அந்தவகையில், நேற்று இரவு காற்றின் வேகம் அதிகரித்ததால் மெட்ரோ ரயிலை இயக்குவதில் சிரமம் ஏற்பட்டது. இதனால், நேற்று இரவு 8 மணிக்கு மெட்ரோ ரயில் சேவை நிறுத்தப்பட்டது. இந்நிலையில், இயல்பு நிலை திரும்பியதையடுத்து இன்று மதியம் 12 மணிக்கு மெட்ரோ ரயில் சேவை மீண்டும் தொடங்கியது. விடுமுறை தின அட்டவணையின் படி 10 நிமிடத்திற்கு ஒரு ரயில் என இயக்கப்பட்டது. கொரோனா தடுப்பு விதிமுறைகளை பின்பற்றியே பயணிகள் நிலையங்களுக்குள் அனுமதிக்கப்பட்டனர்.